## பட்டுக்கூடு உற்பத்தி – உற்பத்தித் திறனை ஊக்குவிக்க – 3050 பட்டு விவசாயிகளுக்கு

# தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூ.30 கோடி உதவித்தொகை!

## சட்டப்பேரவையில் – பட்டு வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 01-**

**சட்டப்பேரவையில், பூம்புகார் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கிய பதிலுரையில், "பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்க, 3050 பட்டு விவசாயிகளுக்கு தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூபாய் 30 கோடி உதவித்தொகை வழங்கப்படும்" என்பது உள்ளிட்ட, பட்டு வளர்ச்சித்துறையில் 17 அறிவிப்புகளையும், தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 7 அறிவிப்புகளையும் வெளியிட்டார்.**

மானியக்கோரிக்கைகள்மீதானவிவாதத்திற்குப் பதிலளித்து அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆற்றிய உரை வருமாறு:-

ஊனிலும், உயிரிலும், மூச்சிலும், பேச்சிலும் கலந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றாரும் போற்றும், மகத்தான ஆட்சி நடத்தும் மக்கள் நாயகன்; மும்மொழி சதியை விரட்டும் செம்மொழி அரசன்; முதல்வர் அவர்களுக்கு என் பணிவான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் வருங்காலமே; தன்மான உணர்வின் வசந்த காலமே; இளைஞர் படையின் எழுச்சியே; கலைஞர் கொள்கையினுடைய தொடர்ச்சியே; துணை முதல்வர் உதயநிதி அவர்களுக்கு என் தனி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், நம்முடைய துணைத் தலைவர், கொறடா, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் என்னுடைய வணக்கத்தை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பூம்புகார் மற்றும் பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உரையாற்ற நல்வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தினையும், நன்றியினையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்டு, கைவிடப்பட்டு கிடந்த பட்டு வளர்ச்சித் துறை நம்முடைய முதல்வர் அவர்களுடைய பார்வைபட்டு, இன்று உச்சம்தொட்டு ஜொலிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் பட்டு உற்பத்தியைப் பெருக்கி, பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தின் கிராமப்புறங்களில் உள்ள 24 ஆயிரம் பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்கள், தொழில்நுட்ப உதவிகள் வழங்கி, வெண்பட்டு உற்பத்தியில் தமிழகத்தை தேசிய அளவில் முதலிடத்திற்கு கொண்டுவர கழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவையான மல்பெரி செடிகளை நடவு செய்ய ஓர் ஆண்டுக்கு 3 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை, கழக அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு அதை 6 ஆயிரத்து 500 ஏக்கராக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 4 ஆண்டுகளில் பட்டு விவசாயிகளுக்கு 25 கோடி ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

அதன் விளைவாக கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், மல்பெரி பரப்பு 24 ஆயிரத்து 500 ஏக்கர் அதிகரித்து தற்போது 48 ஆயிரத்து 45 ஏக்கர் பரப்பளவிலே மல்பெரி சாகுபடி செய்யப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பட்டு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கழக அரசில் முதல் முறையாக power tiller இயந்திரங்கள் வழங்குகின்ற திட்டம் தொடங்கப்பட்டு, கடந்த 3 ஆண்டுகளில் ரூ.2 கோடியே 80 இலட்சம் மதிப்பில் 800 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு power tiller இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் power tiller இயந்திரங்கள் ரூ.87 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் 250 பட்டு விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கான மானியம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.87 ஆயிரத்து 500 ஆக இருந்தது.

நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, விவசாயி களுடைய கோரிக்கையை ஏற்று 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, கடந்த நான்கு ஆண்டுகளில் 3 ஆயிரத்து 811 விவசாயிகளுக்கு 40 கோடியே 91 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நவீன பட்டுப்புழு வளர்ப்பு பண்ணை உபகரணங்கள் கடந்த 3 ஆண்டுகளில், 5 ஆயிரத்து 520 விவசாயிகளுக்கு ரூபாய் 23 கோடியே 54 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கான பண்ணை உபகரணங்கள் ரூ.6 கோடியே 81 இலட்சம் மதிப்பில் 2 ஆயிரத்து 350 பட்டு விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகமொத்தம் 4 ஆண்டுகளில் 21 ஆயிரத்து 749 பயனாளிகளுக்கு ரூபாய் 172 கோடியே 90 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, பட்டு விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் பட்டு முட்டை தடையின்றி கிடைப்பதற்காக கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் ஒரு கோடி பட்டு முட்டைகள் பதனம் செய்யும், குளிர்பதன கிடங்கு ரூபாய் 4 கோடியே 46 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வெண்பட்டு உற்பத்தியினை அதிகரிக்க திருப்பூர் மாவட்டம், மானுபட்டியில் தனியார் பட்டு முட்டை உற்பத்தி மையம் அமைக்க ரூபாய் 52 இலட்சத்து 50 ஆயிரம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2021 ஆம் ஆண்டு தமிழகத்தில் 1,834 மெட்ரிக் டன்னாக இருந்த பட்டு உற்பத்தி கழக அரசின் பல்வேறு சீரிய திட்டங்களால் இதுவரை இல்லாத அளவில், நடப்பாண்டில் 2 ஆயிரத்து 723 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டு, தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக இன்றைக்கு விளங்கி கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், உசிலம்பட்டி தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், உசிலம்பட்டி தொகுதியிலே பட்டுப்புழு வளர்ப்பை ஊக்கப்படுத்தி மல்பெரி சாகுபடி செய்யவும், தரமான பட்டு முட்டைகளை வழங்கவும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆக, அவருக்கு நான் சொல்லிக்கொள்வது, உசிலம்பட்டி தொகுதியிலே உசிலம்பட்டி, சேடப்பட்டி மற்றும் செல்லம்பட்டி ஆகிய மூன்று வட்டாரங்களில் 280 ஏக்கர் பரப்பளவில் 135 பட்டு விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க, மதுரையில் ஒரு தொழில்நுட்ப சேவை மையம் உள்ளது. உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதியில் நடப்பாண்டில் புதிதாக 12 விவசாயிகள் 21 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்துள்ளனர். இவர்களுக்கு 48 இலட்சத்து 91 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பீட்டில், மல்பெரி நடவு செய்தல், தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு மானியம் வழங்கப்பட்டிருக்கின்றன. மாநிலம் முழுவதும் தேர்வு செய்யப்படும் பட்டு விவசாயிகளுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஓசூரில் செயல்படும் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் 6 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொகுதி பட்டு விவசாயிகளுக்கு தரமான பட்டுப் புழுக்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படும் இளம்புழு வளர்ப்பு மையங்கள்மூலம் வழங்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பூம்புகார்

பூம்புகார் என்ற பெயரைக் கேட்டதுமே நமக்குள் ஒரு புத்துணர்ச்சி எழும். கண்ணகி, கோவலன் கதையை பூம்புகார் என்ற பெயரிலே தன் வண்ணத் தமிழால் வார்த்து வரலாற்றுச் சாதனை புரிந்தவர் கலைஞர். அந்த வகையிலே, இன்று கைவினைக் கலைஞர்களின் பொக்கிஷமாக மிளிருகிறது பூம்புகார்.



தமிழகத்தில் உள்ள 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக கலைப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திடவும், கைவினைக் கலைகளைப் பாதுகாத்து உலகம் எங்கும் கொண்டுசெல்வதற்காக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்" என்ற பெயரிலே தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, 7 உற்பத்தி நிலையங்கள், 22 விற்பனைக் கூடங்கள், 2 நகர்ப்புர விற்பனைக் கண்காட்சி திடல்கள் செயல்பட்டு வருகின்றன.

பூம்புகார் நிறுவனத்தின் புதுடெல்லி, கொல்கத்தா, கோயம்புத்தூர் ஆகிய 3 விற்பனை நிலையங்கள் ரூ.3 கோடியே 43 இலட்சம் செலவிலும், தமிழகத்தில் இருக்கிற சுவாமிமலை, நாச்சியார் கோவில், மதுரை, வாகைக்குளம், தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, மாமல்லபுரம் ஆகிய 7 உற்பத்தி நிலையங்கள் ரூ.3 கோடியே 50 இலட்சம் செலவில் பழுதுபார்த்து, புனரமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.1 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடலூர் விற்பனை நிலையம் விரைவிலே திறந்து வைக்கப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கடந்த 4 ஆண்டுகளில் காஞ்சிபுரம், சேலம், தென்காசி, திருநெல்வேலி, விழுப்புரம், ஈரோடு, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தனித்துவம்மிக்க கலைப் பொருட்களுக்காக, 7 பொது வசதி மையங்கள் ரூ.3 கோடியே 94 இலட்சம் மதிப்பில் கட்டி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக 2,000க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் பயன் பெறுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கைவினைக் கலைஞர்கள் கலைப் பொருட்களை விரைவாக வடிவமைக்கவும், உற்பத்தி திறனை மேம்படுத்தவும், 700 கைவினைக் கலைஞர்களுக்கு ரூ.70 இலட்சம் மதிப்பில் நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 270 கைவினைக் கலைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. 1,195 கைவினைக் கலைஞர்களுக்கு அரசு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆக, அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் பூம்புகார் நிறுவனம் ரூ.165 கோடியே 69 இலட்சம் மதிப்பில் கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இதில் ரூ.2 கோடியே 92 இலட்சம் மதிப்பிலான கலைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ரூ.2 கோடியே 67 இலட்சம் மதிப்பிலான கலைப் பொருட்கள் online மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த

4 ஆண்டுகளில், இதுவரை எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு ரூ.3 கோடியே 61 இலட்சம் லாபம் ஈட்டியிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர் ஜே.ஜி. பிரின்ஸ் இங்கே பேசுகிறபோது, மண்பாண்டத் தொழில்களுக்கு புவிசார் குறியீடு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தமிழகத்தின் பாரம்பரிய கலைப் பொருட்களுக்கு உலக அங்கீகாரம் கிடைக்கும் வகையில், கழக அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில், இதுவரை எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் நெட்டி வேலை, அரும்பாவூர் மரச்சிற்பம், மயிலாடி கற்சிற்பம், தஞ்சாவூர் வீணை, மானாமதுரை மண்பாண்டம், மயிலாடுதுறை தைக்கல்பிரம்பு கைவினை, செட்டிநாடு கொட்டான், நரசிங்கபேட்டை நாதஸ்வரம் ஆகியவற்றுக்கு புவிசார் குறியீட்டை நம்முடைய அரசு பெற்றுத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை மொத்தம் 20 கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடுகளைப் பெற்று, இந்தியாவிலே கைவினைப் பொருட்களுக்கு அதிக புவிசார் குறியீடுகளைப் பெற்ற மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்களுடைய வழிக்காட்டுதலின்படி, பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் 17 அறிவிப்புகளையும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 7 அறிவிப்புகளையும் நான் வெளியிடுகிறேன்.

### அறிவிப்புகள்
### பட்டு வளர்ச்சித் துறை

1. பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்க, 3,050 பட்டு விவசாயிகளுக்கு தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க ரூபாய் 29 கோடியே 46 இலட்சத்து 88 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்

2. அதிக மகசூல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் 3,050 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய 6 கோடியே 82 இலட்சத்து 50 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்

3. பட்டுவளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 2 அரசு வித்தகங்கள், 7 அரசு விதைப் பண்ணைகள், 2 அரசு பெருமளவு பட்டுப் பண்ணைகள், 1 அயலின விதைப் பட்டுக்கூடு அங்காடி ஆகியவற்றில் புதிய கட்டடங்கள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் நிறுவிட ரூபாய் 5 கோடியே 13 இலட்சத்து 25 ஆயிரம் நிதி வழங்கப்படும்.

4. தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேல் பட்டுப் புழுவளர்ப்பு மேற்கொண்டு வரும் 1000 முன்னோடி பட்டு விவசாயிகளின் மண்வளம் மற்றும் மல்பெரி இலை மகசூலை அதிகரித்திட செரிகம் போஸ்ட் தயாரிப்பதற்கான இயந்திரம், உயிர் உரம், மல்பெரி வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் சோலார் விளக்குப்பொறி ஆகியவை ரூபாய் 4 கோடியே 82 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

5. 3,050 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மதிப்பில் நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

6. தென் மாவட்டங்களில் உள்ள பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேனி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங்காடி வளாகம் ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பில் நிறுவப்படும்.

7. ஓசூர், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையத்தில் 3,050 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 2 கோடியே 13 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் பட்டுவளர்ப்பு குறித்த தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும்.

8. மாநிலத்தில் பட்டுநூற்பு தொழிலுக்கு தேவையான உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும்வகையில் புதிதாக பட்டுநூற்பு அலகுகள் நிறுவிட தனியார் தொழில்முனைவோரை ஊக்குவித்து மாநிலத்தின் பட்டுநூற்புப் பிரிவினை மேம்படுத்த ரூபாய் 2 கோடியே 2 இலட்சத்து 27 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படும்.

9. பட்டுவளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 3 அரசு பட்டுப் பண்ணைகள் மற்றும் ஈரோடு வித்தக கட்டடத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் ஒரு கோடியே 26 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் மேம்படுத்தப்படும்.

10. நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் அணைக்கட்டிப்பாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங்காடி வளாகத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூபாய் 50 இலட்சம் நிதி வழங்கப்படும்.

11. தரமான பட்டுக்கூடு உற்பத்தியினை ஊக்குவிக்க, 3,050 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 38 இலட்சத்து 13 ஆயிரம் மதிப்பில் நோய்த்தடுப்பு மருந்துப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

12. தரமான விதைப் பட்டுக்கூடு உற்பத்தி செய்யும் 20 விவசாயிகளுக்கு இளம்புழுவளர்ப்பு அறை அமைக்க ரூபாய் 30 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும்.

13. பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப சேவைகள் மற்றும் பட்டுப்புழு வளர்ப்புக்கான இடுபொருட்கள் வழங்கிட புதிதாக 20 பட்டு பல்நோக்கு ஆலோசனை மையங்கள் அமைக்க ரூபாய் 20 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும்.

14. மாநிலத்தில் மல்பெரி விரிவாக்கத்திற்கு தேவைப்படும் மல்பெரி நாற்று உற்பத்தியை ஊக்குவிக்க, 50 ஏக்கர் பரப்பில் மல்பெரி நாற்றங்கால் அமைக்கும் விவசாயிகளுக்கு ரூபாய் 18 இலட்சத்து 75 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.

15. பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம் பட்டுப்புழுக்கள் வளர்ப்பு செய்து விநியோகம் செய்யும்வகையில், 5 பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைத்திட ரூபாய் 16 இலட்சத்து 25 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.

16. மல்பெரி மற்றும் பட்டுப்புழுவளர்ப்பில் உயிரியல் முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மையை ஊக்குவிக்கும் வகையில் திருப்பூர் மாவட்டம் மைவாடி அரசு பட்டுப் பண்ணையில் உயிரியல் நோய்க் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி ஆய்வகம் ரூபாய் 7 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் அமைக்கப்படும்.

17. பட்டுநூல் உற்பத்தி செய்யும் தானியங்கி பட்டுநூற்பகத்தில் நீர் சுத்திகரிப்பு ஆலை அமைக்க ரூபாய் 5 இலட்சத்து 75 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.

### தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. ரூபாய் 2 கோடி மதிப்பில் கைவினைஞர்கள் தயாரிக்கும் பொருட்களை மின்வணிகம்மூலம் உலகச் சந்தைக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்தில் "கைவினைப் பொருட்கள் சந்தை இயக்கம்" (Handicrafts Marketing Mission) செயல்படுத்தப்படும்.

2. ரூபாய் 1.30 கோடி மதிப்பில் தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்த இந்தியாவின் முக்கிய பெருநகரங்களில் 10 விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படும்.

3. ரூபாய் 1.10 கோடி மதிப்பில் புவிசார் குறியீடு பெற்ற கைவினைப் பொருட்கள் மற்றும் இதர கைவினைப் பொருட்களுக்கான வடிவமைப்புத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி 510 கைவினைஞர்களுக்கு ஊக்கத்தொகையுடன் வழங்கப்படும்.

4. ரூபாய் 36 இலட்சம் மதிப்பில் நலிந்துவரும் கைத்திறத் தொழில்களான பொய்க்கால் குதிரை, கடம் இசைக்கருவி மற்றும் தஞ்சாவூர் உருட்டு பொம்மைகள் ஆகிய பொருட்களைச் செய்யும் 60 கைவினைஞர்களுக்கு ஊக்கத்தொகையுடன் சிறப்பு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும்.

5. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது பெறும் 85 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ரொக்கப் பரிசினை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தியும், 5 கிராம் வெள்ளிப் பதக்கத்தினை 50 கிராமாக உயர்த்தியும் ரூபாய் 25 இலட்சம் செலவில் இவ்விருது வழங்கப்படும்.

6. ரூபாய் 20 இலட்சம் செலவில் அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறப் போட்டி வெற்றியாளர்களுக்கு விருதுடன்கூடிய ரொக்கப் பரிசினை ரூபாய் 2 ஆயிரத்திலிருந்து ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

7. ரூபாய் 20 இலட்சம் மதிப்பில் 200 கைவினைஞர்களின் திறமையை ஊக்கப்படுத்தவும் அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் தொழில்நுட்ப உபகரணப் பொருட்கள் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரை வழங்கினார்.



கோவை காந்திபுரம் சத்தி சாலையில் உள்ள ஜி.பி.கிராண்ட் கேலக்ஸி அரங்கில் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் நடத்திய "உலமாக்கள் பங்கேற்கும் புனித ரமலான் 2025" விழாவில் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி உலமாக்களுக்கு, ரமலான் பரிசுகள் வழங்கி, ரமலான் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, சிறப்புரையாற்றினார். மாவட்ட கழக செயலாளர்கள் நா. கார்த்திக், தொ.அ. ரவி, தளபதி முருகேசன் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேயர் ரங்கநாயகி ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஜமாத்களின் உலமாக்கள், கோவை மாவட்ட அனைத்து ஜமாஅத்கள், இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு, நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தி.மு.க சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமைக் கழக பேச்சாளர் கரூர் முரளி, மாவட்ட அவைத் தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் கு.சின்னதுரை ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.